## திண்டுக்கல் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**பிறப்பிப்பவர் - திரு.இரா.புண்ணியகோட்டி எம்.எஸ்.சி., எம்.எட்.எம்.பில்**

**மூ.மு.எண்.181/அ1/2024 நாள்: .09.2024**

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி - பள்ளிக்கல்வி - கருணை அடிப்படை பணிநியமனம் - திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர், அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.ம.கார்த்திக் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து - ஆணை வழங்குதல் - சார்பு.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.101 பள்ளிக் கல்வி(பட்ஜெட்II)த் துறை. நாள்:18.05.2018.
2. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாயப்பு (க்யூ 1)த்துறை நாள்:26.02.2020.
3. அரசாணை (நிலை) எண்.151 பள்ளிக் கல்வி (பக1(1))த் துறை நாள்.09.09.2022
4. திண்டுக்கல் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.5315/அ1/2023. நாள்.31.07.2023.
5. திண்டுக்கல் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.181/அ1/2024. நாள்.22.01.2024.
6. அரசு கடித எண்.(e file) எண்.4419/தொ.க,1(1)/2024-1 நாள்.17.05.2024
7. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.26062/ஜே/இ2/2023. நாள்.22.05.2024.
8. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.004786/ஜே/இ3/2024. நாள்.30.08.2024.

*****

08.10.2024

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர், அரசு மேல்நிலைப்பள்ளியில் கருணை அடிப்படை நியமனத்தின் மூலம் இளநிலை உதவியாளராகப் பணிவாய்ப்பு பெற்று, பணியாற்றி வரும் திரு.ம.கார்த்திக் என்பாருக்கு பார்வை 6ல் கண்டவாறு அரசால் வெளியிடப்பட்ட அறிவுரைகளின்படி செயல்பட பார்வை 7ல் காணும் 22.05.2024 நாளிட்ட தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளுக்கிணங்க மேற்படி பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணியில் சேர்ந்த நாளான 01.08.2023 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது

Scanned with ACE Scanner

| வ. எண் | பெயர் மற்றும் பதவி / பணியாற்றும் பள்ளி / அலுவலகம் | இளநிலை உதவியாளர் பதவியில் நியமன நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.ம.கார்த்திக்<br>இளநிலை உதவியாளர்.<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>ஆத்தூர்<br>திண்டுக்கல் மாவட்டம் | 01.08.2023<br>முற்பகல் | 01.08.2023<br>முற்பகல் |

<u>நிபந்தனைகள்:</u>

1. இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து மூன்றாண்டுகள் பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.
2. உயர்நிலைப் பள்ளிப்படிப்பில் தமிழை மொழிப்பாடமாகவே அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாமல் இருப்பின், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணிவரன்முறை செய்த நாளிலிருந்து இரண்டாண்டிற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
3. பவானி சாகர் அடிப்படைப் பயிற்சி மற்றும் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.
4. தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.
5. பணிவரன்முறை செய்த விவரத்தினை சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளமாறு சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :

அசல் பணிப்பதிவேடு மற்றும் ஆவணங்கள்.

1/10/2024

முதன்மைக்கல்வி அலுவலர்
திண்டுக்கல்

01/10/24

பெறுநர்:

1. தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, ஆத்தூர்.
2. சார்ந்தபணியாளர் ( உரிய வழியாக).

Scanned with ACE Scanner